Verified by RedEstate ™

கருக்கம்

நிலம்–வீட்டுமனை ஒப்படை–அரசு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடுகள் கட்டி குடியிருப்போரின் ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத்திட்டம் 30.9.2009 உடன் முடிவடைந்தது– மேலும் ஓராண்டு காலத்திற்கு, 30.9.2010 வரை நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய்(நி.மு.1(2)த்)துறை

அரசாணை (நிலை) எண்: 366 நாள்: 8.10.2009
படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.854 வருவாய்த்துறை, நாள். 30.12.06.
2. அரசாணை (நிலை) எண். 498 வருவாய்த்துறை, நாள் 5.9.2007.
3. அரசாணை (2டி) எண். 711 வருவாய்த்துறை, நாள் 30.11.2007.
4. அரசாணை (நிலை) எண். 34 வருவாய்த்துறை, நாள் 23.1.2008.
5. அரசாணை (நிலை) எண் 241 வருவாய்த்துறை, நாள் 9.5.2008.
6. அரசாணை (நிலை) எண் 579 வருவாய்த்துறை, நாள் 3.10.2008.

******

ஆணை

மேலே படிக்கப்பட்ட அரசாணை 1–ல் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு, அவர்களது ஆக்கிரமிப்புகளை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்கும் சிறப்புத் திட்டம் ஒன்று அரசால் வெளியிடப்பட்டது. அச்சிறப்பு திட்டத்தின் கீழ், அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருப்பவர்களுக்கு, அந்நிலங்கள் அரசின் உபயோகத்திற்கு தேவையில்லையெனில், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அக்குடியிருப்புகளை புலத்தணிக்கை செய்து, உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களைப் பெற்று அந்நிலங்கள் அரசுக்கு தேவையில்லை எனில், வீட்டுமனை பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த ஆணையிடப்பட்டது. இதற்கென செயல்பாட்டில் இருந்த பல தடையாணைகள் தளர்வு செய்யப்பட்டன.

2. மேலே 2 மற்றும் 3–ல் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளில் இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர்களுக்கு சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு சில தெளிவுரைகள் வழங்கப்பட்டன. மேலும் இத்திட்டம் அவ்வப்போது நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

3. மேலே 4–ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் இத்திட்டம் அரசு நிலங்களில் ஐந்தாண்டுகளுக்கு மேல் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கும் பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது.

4. இத்திட்டத்தின் கீழ் அதிகளவில் பயனாளிகள் பயன் அடைய வேண்டும் என்பதற்காகவும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளிலுள்ள குடியிருப்பு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தவும் இச்சிறப்புத்திட்டம் அரசாணை (நிலை) எண். 579 வருவாய்த்துறை நாள் 3.10.2008-ல் 30.9.2009 வரை நீட்டிப்பு செய்யப்பட்டது.

5. தற்போது மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டியவை நிலுவையில் உள்ளதால் இத்திட்டத்தினை மேலும் ஓராண்டு காலத்திற்கு, 30.9.2010 வரை நீட்டித்து அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணைப்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலர்

பெறுநர்
முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை-5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
நகல்:
அனைத்து துறை செயலாளர்கள், தலைமைச்செயலகம், சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
வருவாய்த்துறை முதன்மை செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை-9
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Verified RedEstate™